## வரையறுக்கப்பட்ட இன்போ மீடியா (தனியார்) கம்பனி - 2015

---

வரையறுக்கப்பட்ட இன்போ மீடியா (தனியார்) கம்பனியின் (''கம்பனி'') 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரைக்கமைய இந்த அறிக்கை வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான (எஸ்எம்ஈஎஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். எனது கணக்காய்வினை இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

(அ) தொடர்ச்சியான வியாபார நட்டங்கள் மற்றும் பாதகமான தேறிய சொத்துக்கள் நிலைமை காரணமாக 2012 ஆம் ஆண்டிலிருந்து கம்பனியானது செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் பாதகமான தேறிய சொத்துக்கள் நிலைமை ரூபா 4,496,257 ஆகக் காணப்பட்டமையினால் 2016 பெப்ரவரி 08 இல் ரூபா 185,511 ஆன மொத்த நடைமுறைச் சொத்துக்களையும் ரூபா 4,681,768 ஆன மொத்த நடைமுறைப் பொறுப்புக்களினையும் முறையே பதிவழிப்பதற்கும் மற்றும் மீள கணக்குகளுக்குக் கொண்டுவருவதற்கும் சபை தீர்மானித்திருந்தது. இந்நிகழ்வுகளானது தொடாந்து இயங்கும் எண்ணக்கருவாக தொடருவதற்கு கம்பனியின் இயலுமை மீது ஒரு குறிப்பிடத்தக்களவு சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய பொருண்மையான நிச்சயமற்ற தன்மையினை சுட்டிக் காட்டுகின்றது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் இந்த உண்மைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கம்பனியானது அதன் நிதிக்கூற்றுக்களில் சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களுக்கான (எஸ்எம்ஈஎஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கம் தொடர்பான தெளிவான மற்றும் பிரத்தியோகமான கூற்றை மேற்கொண்டிருக்கவில்லை.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 பாதகமான அபிப்பிராயம்**

பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக, வரையறுக்கப்பட்ட இன்போ மீடியா (தனியார்) கம்பனியின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான (எஸ்எம்ஈஎஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தரவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 எஸ்எம்ஈஎஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ் உடனான இணக்கப்பாடு**

நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கும் போது பிரயோகிக்கப்பட்ட கணக்கீட்டு நியமங்கள் வெளிப்படுத்தப்படவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பின்வரும் கடன்கொடுத்தோர் கணக்குகள் மீளாய்வாண்டினுடைய ஆரம்பத்திலுள்ள தொடக்க மீதிகளாக பிழையாக முன் கொண்டுவரப்பட்டது. எவ்வாறாயினும், அவ்விரு மீதிகளுக்கிடையில் பின்வரும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்குகளின் வகைகள் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளபடியான இறுதி மீதி | 2015 ஜனவரி 01 இல் உள்ளபடியான ஆரம்ப மீதி | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| ஏனைய கடன்கொடுத்தோர் | 259,500 | 860,000 | 600,500 |
| ஏஎன்சீஎல் நடைமுறைக் கணக்கு | 4,417,933 | 3,813,833 | 604,100 |

**3. நிதிசார் மீளாய்வு**

**3.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுக்கான ரூபா 2,500 கணக்காய்வுக் கட்டண கொடுப்பனவு தவிர வேறு எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 கூட்டிணைந்த திட்டம்**

கம்பனியினால் அதன் ஆரம்பத்திலிருந்து கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.